ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2129/62 - 2019 ජූනි මස 26 වැනි බදාදා - 2019.06.26

*2129/62 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### விசேட வர்த்தமானி அறிவிப்பின் திருத்தத்திற்கான அனுமதி கோரல் தொடர்பான அறிவித்தல்

*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் அமைச்சராக பணியாற்றிக் கொண்டிருக்கும் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இத்தால் குறிப்பிடுவது-*

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபையின் (திருத்தியமைக்கப்பட்ட) அதிகாரமளிக்கப்பட்ட சட்டப் பிரிவு 8ஏ(i) இன் பிரகாரம் 2005, யூன் மாதம் 07 ஆந் திகதிய 1396/07 ஆம் இலக்க களுத்துறை நகர அபிவிருத்தி பிரதேசத்திற்காக பிரசுரிக்கப்பட்ட விசேட வர்த்தமானியில் (சிங்கள மொழி மூலம் தயார் செய்யப்பட்டது) காணப்படும் தவறுகளை திருத்தியமைப்பதற்கான அறிவித்தலாகும்.*

*களுத்துறை அபிவிருத்தித் திட்டத்தில் களுத்துறை பிரதேசத்திற்கான ஒழுங்குமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பயன்பாட்டு வலயங்கள்சார் வகைப்படுத்தலின் கீழ், ஆரம்ப குடியிருப்பு வலய மண்டலத்தின் பகுதி 10.4.1.1 (xv) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறையானது ச. மீ. 250 இற்கு மேற்பட்ட வகையில் நில அளவு அமைந்திருத்தலாகாது என்ற வகையில் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.*

*நிலப் பயன்பாட்டு வலயங்கள்சார் வகைப்படுத்தலின் கீழ், கலப்பு குடியிருப்பு வலய மண்டலத்தின் பகுதி 10.4.2.1 (ix) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குமுறையானது ச. மீ. 500 இற்கு மேற்பட்ட வகையில் நில அளவு அமைந்திருத்தலாகாது என்ற வகையில் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும்.*

மேற்குறிப்பிடப்பட்டுள்ள திருத்தங்களாவன, 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்பதோடு மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது தவிர்க்கப்பட்ட குறித்த ஏற்பாட்டின் எந்த ஒரு ஒழுங்குமுறையும், மேலே குறிப்பிடப்பட்ட திகதி அல்லது அதற்கு முன் செயற்பாட்டிற்கு வருமாயின் அது பயனுடையது மற்றும் செல்லுபடியானதாகவும் கருதப்படும்.

*பாட்டலி சம்பிக்க ரணவக்க (பா. உ.),*
*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.*

*பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,*
*இல. 17 மற்றும் 18 ஆம் மாடிகள்,*
*"சுஹூறுபாய",*
*பத்தரமுல்லை,*
*2019, யூன் 25.*

*07-298*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.